உ

கணபதிதுணை.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை

இலந்தைநகர்

ஸ்ரீதண்டபாணி விருத்தம்

ஸ்ரீமுத்துக்குமாரர்ஊசல்முதலியன.

அன்பளிப்பு

4835

III. 46

இவை

ஷை கொழும்புத்துறை

ம-ா-ா-ஸ்ரீ

தி. குமாரசாமிச் செட்டியாரவர்கள்

விரும்பிய வண்ணம்,

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

சாமிநாதையரால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம்

லார்ட் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1891.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,

GF
O, IV (Oha), IV (mintier)
C91

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
4835.
III 46

உ

கணபதிதுணை.

இலந்தைநகர்

ஸ்ரீதண்டபாணி விருத்தம்.

காப்பு.

தயில்வாழ் பொழிலிலந்தைக் கோநகர்வாழ் செவ்வே
ாயில்வாழ் மலர்க்கை யமலன்—மயில்வாழ்
பெருமான் றனைத்துதிப்பப் பேதையே னெஞ்சில்
வருமா லொருகோட்டு மா.

விருத்தம்.

கங்கை நதியு மிளமதியுங்
கவின்ற வேணிப் பரமர்திருக்
கண்கள் களிப்பத் தோன்றடிகள்
கருணைப் பிழம்பாந் திருவுருவைச்
சங்கை யறவிங் கெளிதடியேன்
றரிசித் தல்ல கண்டமெலாந்
தணப்பக் காட்சி தந்தனையித்
தமியேன் புரிந்த தவமென்னே
கொங்கை யுறுபூங் கடம்பணியுங்
குருந்தே பிறவிப் பிணிமருந்தே

குலவு மன்பர்க் கொருவிருந்தே
குணமா மலையே மலையேந்தி
தங்கை யிருகண் மணியனைய
தனையா தனையா வரும்புகழத்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

பூவும் புனலுஞ் சுடருநறும்
புகையு மேந்தி நினையன்பிற்
பூசித் தறியே னனுதினமும்
போற்றி நினையே நினைந்துருகி
மேவும் பெரியர்ப் பணிந்தொழுகும்
விதமு மறியேன் கொடும்பிணியை
வீட்டி யெனையு மொருபொருளா
மேவி யாண்ட விதமென்னே
வாவு மிளமான் மகளிருகண்
மணியே யவண்முன் வருகணியே
வஞ்ச வவுணர்ப் பொரும்பகையே
வானோர்க் கருளும் பெருந்தகையே
தாவுந் தகரூர்ந் தருள்பழுத்த
தனிக்கற் பகமே தயைசான்றோர்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

துற்றோர் தரங்க வாரிதியுந்
தொலையா வன்றிற் பெயர்க்கிரியுந்
தொலைத்து விளங்கு மயிற்படையைத்

தொழுது பொழுது கழிப்பேனைப்
பற்று மகளிர் விழிக்கடலும்
பணைத்த கொங்கைப் பொருப்புமிகப்
பகைத்து வருத்தி மனமயங்கப்
பண்ணு நின்ற விஃதென்னே
யற்றார்க் குதவு மாநிதியே
யமரர்க் கொருசே னாபதியே
யானை மகளி னருந்துணையே
யல்லற் பரவைக் கிரும்புணையே
சற்றுய் பவர்க்கு மருண்முருகா
தாமோ தரன்றன் றிருமருகா
தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே. ௲

பரித்த வுடையு மலர்த்தொடையும்
பணியு முதலாம் பொருள்பலவோர்
பனவ குமரர்க் களித்திடவும்
பகைத்த தகுவர் வாழ்புரத்தை
யெரித்த பெருமா னிடைச்சீற்ற
மேது மின்றித் தந்தாயென்
றியம்பி மகிழ்வித் திடுதலினு
லெம்மான் பொறையை யென்றறிந்தேன்
விரித்த வொளிகொ ளயில்வேலா
மெய்யன் புடையார்க் கனுகூலா
விமலன் விழிதந் திடுபாலா
விறல்கொ ளவுணர் குலகாலா

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

தரித்த கருணை மிகுசீலா
சாற்று சதுமா மறைநூலா
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே. ௪

உலகிற் பிறந்து பருவமுறை
யுற்று மரிக்கும் பசுப்போலா
தோங்குங் கவுரி மடவரல்பா
லுற்று விருத்த வுருவாதி
யிலகப் புனைந்து விளையாடு
மிறைசே யெனற்கோ வள்ளிமுன
மெய்தி விருத்த வுருவாதி
யெடுத்து விளையாட் டயர்ந்தனையே
யலகில் கருணைப் பெருக்காறே
யடியேஞ் செய்த தவப்பேறே
யானைக் கிளைய வரியேறே
யவுணர் குலத்தை யடுமாறே
சலச மடவார்க் கிடமாகித்
தரும முதலா நாற்பொருளுந்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே. ௫

ஆறு முகங்கொண் டொருமுகமா
வடியார்க் கருளுந் திறமதுதா
னாறு சமயங் களுக்குமிறை
யாதி நீயென் றுணர்த்திடவும்
பேறு முகக்கு மிதையறியாப்

பேதை மாக்க ணினதடியைப்
பேணா தந்தோ பெருந்துன்பப்
பிறந்தைப் பரவை யழுந்துவாராற்
பாறு முகக்கும் பறந்தலையிற்
பகைத்த வவுணப் படைதொலையப்
பாற்றி யமரர் பெயர்நிலைப்பப்
பண்ணுங் கருணைப் பண்ணவனே
சாறு முகக்கு மறுகுதொறுந்
தரும பரிபா லனம்புரிவோர்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

சேதிப் பரிய தவவொழுக்கச்
செல்வம் வாய்ந்த குறுமுனிக்குச்
செவ்வே தமிழி னிலக்கணத்தைச்
செப்பி யருளி யொப்பில்லா
வாதிச் சங்கத் திடைமேய
வதனா லெம்மான் றமிழ்ப்பரம
வாசா னென்ப தறிந்தடைந்தே
னகற்றா தளித்த னின்கடனே
சாதிப் பைம்பொற் றருவாதி
தழைப்ப வொருமாப் பெருமுதலைத்
தடிந்தே யரிமுன் னோர்துயரந்
தணப்ப வரிமா முகற்றொலைத்தோய்
தாதிற் பொலிபூஞ் சோலைகளுஞ்
சலச மலர்நீர் வாவிகளுந்

தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே. ரு

நிலையில் பதிமுன் முப்பொருளி
னிலைமை யாய்த லன்றியென்றும்
நிலைத்த பதிமுன் முப்பொருளி
னிலைமை யாய்தல் சிறிதுமிலேன்
கலையின் மதிநின் றிருமுகமாங்
கலைமா மதிக ளிருமூன்றுங்
கருதிக் கொடிய வினையிருளைக்
கடிந்து வாழ்வ தென்றுகொலோ
வலையி லின்ப வாரிதியே
யமலா னந்தப் பெருவாழ்வே
யருண்மா மழைபெ யம்புதமே
யளிமே வுறுபூங் கற்பகமே
தலையி லிரந்தோன் பெறுமணியே
தவத்தோர் நுகரு மருமருந்தே
தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே. அ

அங்க மடிகட் கருள்விழியி
னாங்க ளுய வறிவிலியென்
னங்கம் புகுந்து வருத்துவனு
லன்னுன் கரியைப் புரந்தரர
சிங்க மளித்த மைந்தனெனிற்
றேவே தெய்வச் சிம்புளருள்
செல்வ னலையோ வவனுமொரு

தெவ்வோ திருவாய் மலர்ந்தருள்வாய்
பங்க மளித்த சிதடரொன்றும்
பார்த்தற் கரிய பரஞ்சுடரோ
பரங்குன் றுதி யிருமூன்று
படைவீட் டுறையும் பரம்பரனே
சங்க மளித்த நூனயந்தேர்
தருவோர் தருவோ ரொஞ்ஞான்றுந்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே கூ

கலந்தே மென்றுட் கலவாத
கபடர் புரியுங் கொடுஞ்செயலாற்
கண்ணுங் கருத்தும் புண்ணாகிக்
கலங்கி மலங்கிக் களைகணிலா
தலந்தே னந்தோ நீவெறுப்பி
னுற்றே னுற்றே னுற்றேனு
லஞ்ச லொழிதி யெனவடியேற்
கருளச் சமய மிஃதாமாற்
பலந்தேய் மறத்தி னூரங்குன்றும்
பரங்குன் றுதிப் பலபொருப்பும்
பயின்றே யடியர் துயரமெலாம்
பாற்றி விளங்குங் குருமணியே
சலந்தே யறிஞ ருளத்தமுதே
தளர்வில் வணிகர்க் கிடமாகித்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே கo

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRAR

உ

கணபதிதுணை.

இலந்தை நகர்

ஸ்ரீமுத்துக்குமாரர் ஊசல்

காப்பு.

தமாலநிறத் தோன்மருகர் தண்ணிலந்தை முத்துக்
குமாரர்திரு வூசலினைக் கூற—எமாதிடுக்க
ணெல்லா மகற்றி யினிதளிக்கும் பன்னயங்க
ளெல்லா மொருகோட் டிபம்.

விருத்தம்.

பூமேவு மிமயமிரு வடிவி னின்றூற்
போன்மிளிர்பொற் றூணமிசை வயிரவிட்டத்
தேமேவு தரளவடம் பூட்டு மொன்பா
னெழின்மணிக ளிழைத்துறுபொற் பலகை சாலத்
தூமேவு கங்கைநதித் திரைகள் வார்ந்து
துற்றபல்பூச் சரவணத்தின் றேற்றங் காட்டக்
கோமேவு மதனிலெழுந் தருளி முத்துக்
குமாரசுகு மாரரோ யாடி ரூசல். க

திருகாற்று மொருபூதத் தெவ்வை மாய்ப்பச்
சிறந்திடுநக் கீரனார் செப்பு மொப்பின்
முருகாற்றுப் படையொருபா லன்பர் பாட
முன்னரிய சந்தவகை மொழிந்தே யுள்ள

முருகாற்று மருணகிரி நாத ரன்பி
    ஞேதுதிருப் புகழொருபா லன்பர் பாடக்
குருகாற்று மிலஞ்சிசுலா மிலந்தை முத்துக்
    குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். ௨

வானேங்கு பரங்குன்றிற் றெய்வ யானை
    மணத்தாடுந் திருவூச லாட்டும் வாசக்
கானேங்கு வளைக்குறவர் மகளை வேட்டுக்
    களித்தாடுந் திருவூச லாட்டு முன்னுத்
தேனேங்கு திருவிளையாட் டொன்றுங் காணுச்
    சிறியேங்கண் டானந்தந் திளைக்கு மாறு
கூனேங்கு வளைமுரனீ ரிலந்தை முத்துக்
    குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். ௩

மாதவனுந் திருமகளும் வாணி யோடு
    மலரவனுஞ் சசியொடுவா சவனு மேனி
யாதவமா ரரம்பையரோ டமரர் தாமு
    மகமகிழ்ந்தே நிதமூச லாடி வாழத்
தீதவமார் சூர்முதலா தியர்க டம்மைச்
    செற்றருளு மருட்கடலே யாடீ ரூசல்
கோதவமி லறிஞர்செறி யிலந்தை முத்துக்
    குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். ௪

தோலாத பெருவிறல்கொள் சூரன் றன்னைத்
    தொலைத்தபெருஞ் சூரரோ யாடீ ரூசல்
மாலாத விறற்சிங்க வதனன் றன்னை
    மாய்த்தருளுஞ் சிங்கமே யாடீ ரூசல்

சீலாதி யகன்றகரி வதனன் றன்னைச்
செற்றருளு மதகரியே யாடீ ரூசல்
கூலாதி யழகுறுநீ ரிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். ரு

சரவணத்தி னறும்பதுமப் பாயன் மீதே
தங்கிவிளை யாட்டயர்ந்தீ ராடீ ரூச
லிரவணையு முடலவுணர்த் தொலைத்துத் தேவ
ரினங்களைக்காத் தருள்புரிந்தீ ராடீ ரூசல்
பரவணையு மன்புடையோர் நினைத்த வாங்கே
பசுமயிலின் வந்தருள்வீ ராடீ ரூசல்
குரவணையும் பொழில்சூழு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். சா

வழுத்துபல குணவாள ராடீ ரூசல்
வள்ளிதிரு மணவாள ராடீ ரூசல்
பழுத்தவருட் டனமுடையீ ராடீ ரூசல்
பசுமயில்வா கனமுடையீ ராடீ ரூசல்.
முழுத்தவிரு முத்தலத்தீ ராடீ ரூசல்
முந்நான்கு கைத்தலத்தீ ராடீ ரூசல்
கொழுத்ததமிழ் தெரிபவர்வா ழிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். எ

அலகில்பெரு விறல்வகையோர் வகையார் பாட
அடியவருக் கருள்வகையோர் வகையார் பாட
நிலவுமெழில் வகையினையோர் வகையார் பாட
நிலைத்ததமி ழருள்வகையோர் வகையார் பாட

மலரலங்கல் படிந்தெழுந்து வண்டு பாட
மங்கையர்க ணடம்புரிந்து மகிழ்ந்து பாடக்
குலவுவள மலிந்திலகு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல் அ

மழைத்தவரு ணிறைவிழியீ ராடீ ரூசல்
மலரவனுக் கறைமொழியீ ராடீ ரூச
விழைத்தசுட ரயிற்படையீ ராடீ ரூச
விருமருங்குங் குயிற்பெடையீ ராடீ ரூசல்
தழைத்தசிறை மயிற்பரியீ ராடீ ரூசல்
தணிகையெனு மெயிற்புரியீ ராடீ ரூசல்
குழைத்தமலர்ப் பொழில்சுலவு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். கூ

நாமேவு நான்மறையா கமங்கள் வாழ
நவவீரர் முதலான நலத்தோர் வாழ
வேமேவு சித்தாந்த சைவம் வாழ
விணையில்புக ழைந்தெழுத்தா றெழுத்து வாழத்
தேமேவு செந்தமிழ்ச்சொல் செழித்து வாழத்
தெண்டிரைநீர் சுலவீழத் தேயம் வாழக்
கோமேவு மிலந்தைநகர் வாழ முத்துக்
குமாரசுகு மாரரோ யாடீ ரூசல். கo

முற்றிற்று.

எச்சரிகை.

இராகம்-சாவேரி; தாளம்-உரூபகம்.

திருவேசெழு மணியேசுவைத் தேனேகரி முகன்பின்
வருவேலவ விலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. ௧

வேலா கழற் காலாமயின் மேலாமறை நூலா
மூலாவள விலந்தைப்பதி முருகாவெச் சரிகை.

சூராதியர் பேராதிக டொலையப்பொரும் பெரும்போர்
வீராதிப விலந்தைப்பதி விமலாவெச் சரிகை.

தேவாதமிழ்ப் பாவாவரச் சேவாகனன் மதலாய்
காவார்தரு மிலந்தைப்பதிக் கந்தாவெச் சரிகை.

குறமாதெனுங் கொடிசேர்கொழு கொம்பேகுண மலையே
யறமார்தரு மிலந்தைப்பதி யரசேயெச் சரிகை.

கந்தாமலர்க் கடம்பாவள்ளி காந்தாவெனை யாள
வந்தாய்திரு விலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. ௬

புலவோர்புரி யிகதீர்த்தருள் போதாசம வேதா
பலவார்பொழி விலந்தைப்பதிப் பரமாவெச் சரிகை.

தீராதெய்வ சேனாபதி தெவிட்டாவமு தனைய
பேராதிரு விலந்தைப்பதிப் பெருமானெச் சரிகை.

ஈசாபவ நாசாவிசு வாசா பிரகாசா
தேசாதிரு விலந்தைப்பதிச் செல்வாவெச் சரிகை. ௯

ஏகாவள்ளி மோகாமயிற் பாகாபர யோகா
நாகார்புன விலந்தைப்பதி நாதாவெச் சரிகை. ௧௦

கோதாதிக ளுடையாரொடு கூடாதெனை யாளும்
நாதாதிரு விலந்தைப்பதி நம்பாவெச் சரிகை. கக

மயிலேறிய வழகாமதி வதனுபசும் பொழிலிற்
குயிலேறிய விலந்தைப்பதிக் கோமானெச் சரிகை. கஉ

மலமூன்றுமெய் யடியார்களை மருவாதரு ளமலா
நலமூன்றிய விலந்தைப்பதி நாதாவெச் சரிகை. கரு

பஞ்சானன முடையாரருள் பஞ்சானன மனையாய்
மஞ்சார்பொழி விலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. கச

நாராயணன் மருகாபுகழ் நவவீரர்க ளரசே
காரார்பொழி விலந்தைப்பதிக் கந்தாவெச் சரிகை. கடு

மண்ணாசையும் பெண்ணாசையும் வருத்தாவித மருளு
மண்ணுதிரு விலந்தைப்பதி யரசேயெச் சரிகை. கசு

அழையாமுனம் விரைந்தோடிவந் தடியார்க்கரு ளத்தா
வழையார்பொழி விலந்தைப்பதி மணியேயெச் சரிகை. கஎ

பயனாறு படைவீடெனும் பாலாவயில் வேலா
நயனார்தரு மிலந்தைப்பதி நாதாவெச் சரிகை. கஅ

காலாயுதக் கொடியாய்கழற் காலாவுமை பாலா
சேலார்புன விலந்தைப்பதிச் செல்வாவெச் சரிகை. கசூ

பிணியாதிக ளணுகாதெமைப் பேணும்பெய ராளா
தணிகாசல விலந்தைப்பதிச் சாமீயெச் சரிகை. உ0

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

கீர்த்தனங்கள்.

இராகம்-சுருட்டி; தாளம்-சாபு.

பல்லவி.

ஆறுமு கனைச்சி தானந்த ரூபியை
அனுதின நினைமனமே.

அனுபல்லவி.

வீறும் பசுமயி லேறும்வி நோதனை
மெய்யன்பர்க் குவகையின் விளம்புமெய்ப் போதனை

சரணங்கள்.

க. வள்ளிதெய் வானை மனமகிழ் நாதனை
வானவ ரனுதினம் வணங்கும்பொற் பாதனை
வெள்ளிலை வேலணி விமலவி சாகனை
மெய்ப்பொரு ளாயென்றும் விளங்குறு மேகனை ஆறு

உ. பந்த மறுத்தருள் பாலிக்குங் கந்தனைப்
பரமன்ற னுதல்விழிப் பால்வரு மைந்தனைக்
கந்தமி குந்தக டம்பணி மெய்யனைக்
கமலப வனைக்குட்டுங் கையனை யையனை ஆறு

ங. மலயமு னிக்குத்தமிழ் வழங்குஞ்செவ் வாயனை
வாழ்த்திவ ணங்குமன்பர் மனத்துறை தூயனை
அலையவி டாதெனை யாண்டவு தாரனை
ஆனைவ தனன்றம்பி யாகிய தீரனை ஆறு

ச. அதிர்கட லடக்கிய வற்புதத் தேவினை
ஆறெழுத் தின்பொரு ளாகிய கோவினை

4835
Tu 466

முதிர்சினச் சூரனை முடித்தருள் வீரனை
மொழியு மிலங்கைநகர் முத்துக்கு மாரனை ஆறு

இராகம்-சகனா; தாளம்-ஆதிதாளம்.

பல்லவி.

இலங்கைநகர் வாசனே
இமையவர் நேசனே

அனுபல்லவி.

அலங்கலணி வேலனே
அசுரகுல காலனே இலங்கை

சரணங்கள்.

அனுதின முனதிரு வனச மலரடியை
எனதுள நினைவுற வினிதருள் புரிமதி இலங்கை

உ. ஐம்புல னான்மிக வெம்பிய வெனதுளம்
அம்பர சுகமெனு மம்புதி யுறவருள் இலங்கை

௩. இயலிசை முதலிய நயனுறு தமிழியன்
மயலற வெனதுள முயலுற வருள்புரி இலங்கை

இராகம்-செஞ்சுருட்டி; தாளம்-ஆதிதாளம்.

பல்லவி.

உன்னைநம்பினே னையா
உமையருள் மெய்யா

அனுபல்லவி.

அன்னை தந்தை நீயே
ஆண்டளிப் பாயே உன்னை

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

சரணங்கள்.

க. நெஞ்ச மெங்கு மோடி நினைத்தவை தேடி
வஞ்சர் சொல்லின் வாடி வருந்திப்பின் பாடி உன்

உ. அஞ் ஞான நீங்க ஆனந்தந் தேங்க
மெய்ஞ் ஞான மோங்க மிகக்களி தூங்க உன்

ரு. சிமை யவுல் லாச தெய்வயானை நேச
இமை யவ ரீச இலங்கையில் வாச உன்

இராகம்-துஜாவந்தி; தாளம்-சாபு.

பல்லவி.

உனைமற வாத வொருவர மடியேனுக்
குவந்தருள் புரிந்திடு வாயே.

அனுபல்லவி.

நனைமலர்ப் பொழிற்செந்தி னகரிலெ ழுந்தருளி
நம்பு மடியவர்க் கின்ப மருள்புரி
நாத பரசுக போத வனுதினம்— உனை

சரணங்கள்.

க. உலவும் பசுமயிலு முனதுதி ருவுருவும்
ஒழிவின்றி நினைப்பதெந் நாளோ-துன்பம்
பலவும்பு ரியுமைந்து புலனுக்கு யான்றொண்டு
பண்ணிச்செ லும்மடிமை யாளோ-வளம்
குலவும் பரங்கிரித் தேனே-சுர
குலங்களைக் காத்தருள் வோனே-எங்கும்
நிலவும் பரம்பொரு ணீயென்ற றிந்த தொண்டர்

நிறைந்த பழனியி லுறைந்த குருபர
நீப மணிந்தப்ர தாப சுரவர— உனை

உ. தாலத்தி லெங்கெங்குஞ் சஞ்சரித் தெவரையும்
தாங்கியென் னுள்ளந்தள் ளாடும்-பிறர்
சாலப் புகழ்ந்திடின் மகிழ்ந்துசற் றிகழ்ந்திடிற்
றளர்ந்து சலித்துமிக வாடும்-எழிற்
கோலக் குலாசலத் தோளா-தெய்வ
குஞ்சரி வள்ளிமண வாளா-அருஞ்
சீலத் தவர்பலர் திரண்டு கனிந்துதுதி
செய்து நறுமலர் கொய்து பூசனை
செய்யு மேரகத் தைய வனுதினம்— உனை

ங. மலையிடை யகப்பட்டு வருந்துநக் கீரர்தம்
வருத்த மகற்றவயில் விடுத்தாய்-நெஞ்சம்
உலைவி லருணகிரி யார்திருப் புகழைக்கேட்
டுவந்து பெருங்கருணை கொடுத்தாய்-பெருங்
கலையின் முடிந்தவொரு மணியே-வள்ளி
கண்களித் திடத்தோன்றுங் கணியே-கன
மலைவிற் பரன்விழி வருமுரு காமயில்
வாக னசுர ரோக நாயக
மலர்ந்த பூம்பொழி லிலங்கை வளர்பர— உனை

மங்களம்.

இராகம்-சுருட்டி; தாளம்-சாபு

மங்களம் மங்களம்—சுகுமாரா
மங்களம் மங்களம்.

க. பங்கச நயனவுத் துங்கவி சாகவி
டங்ககுக சிகிது ரங்க-மலர்த்
தொங்கல ணிபுயவி லங்கல ழகவருட்
சங்கரி சுததமிழ்ச் சங்கவுத் தாரா மங்களம்

உ. ஈசமி குந்ததுக்க நாசசு சனவிசு
வாசதெய் வகுஞ்சரி நேச-மிகு
வாசக் கடம்பணியுந் தேசமிகு ஸ்வயம்ப்ர
காச திருப்பழனி வாசசர் வேசா மங்கள

ரு. வேதம னேகர கீதசு சனப்சு
போதவி நாசவி நோத-சுர
பாதப கரமது சூதன விதிசுர
கேதநி வாரக நாதவ நீதா மங்களம்

ச. பாலலோ சனனருள் பால் சுவைமிகுத்த
பாலன மொழிவள்ளி பால-தண்டைக்
காலவ சுரகுல கால மறைபுரியு
மோல பரிதிநிகர் கோலசெவ் வேலா மங்கள

ரு. மத்த கரிவதன னத்தெறு திறலின்மி
குத்தக ரிக்கிளைய வத்த-பரி
சுத்த நிராமய நித்த வகிலசக
கர்த்த விலந்தைநகர் முத்துக் குமாரா மங்களம்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.